JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| CC.No. | 164/2022 | Crime No. | 1095/2020 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-6- ஜெயபிரகாஷ்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**1ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி குவிமுச பிரிவு 317 ன் படி மனு அளிக்கப்பட்டு, மனு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நஞ்சப்பம்பாளையம், அனுமன் பள்ளியில் குடியிருந்து கொண்டு, மெடிக்கலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 5 வருங்களுக்கு முன்பு நான் காலை நேரத்தில் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று இருந்தேன். போலீசார் தமிழ்ச்செல்வன் என்பவரின் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக என்னிடம் கேட்டார்கள். போலீசார் நான் காவல் நிலையத்திற்கு போனதற்காக கையெழுத்து கேட்டார்கள். போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அப்துல் ரகுமான் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 13.10.2020 ஆம் தேதி, காலை சுமார் 11:30 மணிக்கு ஓம் சக்தி கோவிலின் அருகில் ஹீரோ ஸ்ப்ளெண்டர் பிளஸ் TN 56 E 4666 என்ற வண்டியை நிறுத்தி பூட்டிவிட்டு மெடிக்கலுக்கு வந்துவிட்டு மதியம் 02:30 மணி சுமாருக்குசென்று

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:53:03 +0530

பார்த்தபோது தமிழ்செல்வன் என்பவரின் வண்டியை காணவில்லை என்றும் யாரோ திருடி சென்று விட்டார்கள் என்றும் இது சம்பந்தமாக தமிழ்செல்வன் பெருந்துறை காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்து இருந்தார் என்றும் இந்நிலையில் கடந்த 16.10.2020 ஆம் தேதி நானும், கோபால்சாமி ஆகிய இருவரையும் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்க சொல்லி போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டு, ஊத்துக்குளி – விஜயமங்கலம் ரோட்டில் பகலாயூர் மாரியம்மன் கோயில் முன்பு பெருந்துறை போலீசாருக்கு உதவியாக வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த TN 36 AT 3811 ஹீரோ ஹோண்டா ஸ்பிளிலெண்டர் என்ற இருசக்கர வாகனத்திலும் TN 39 CH 9473 என்ற பதிவு எண் கொண்ட Burgman இருசக்கர வாகனத்திலும் வந்தவர்களை நிறுத்தி விசாரணை செய்தபோது அவர்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியை 1) அப்துல் ரகுமான், வயது 38, த/பெ. முனவர் ஜான், 33, பொன்னுசாமி காம்பவுண்ட் , துவாரகை நகர் 3 வது வீதி, திருப்பூர். தற்போது ராஜம்மாள் லே–அவுட், பூந்தோட்டம், முருங்கப்பாளையம், குமார் நகர், திருப்பூர். Burgman வண்டியில் வந்தவர் 2) பர்வீன், வயது 25, க/பெ.அப்துல் ரகுமான், ப்ரியா ஸ்கூல் பின்புறம், எம்.ஆர்.கே இல்லம், சாமுண்டிபுரம், திருப்பூர் என்றும் சொன்னார்கள் என்றும் மேலும் விசாரிக்க அவர்கள் கடந்த 13 .10 .2020 ஆம் தேதி பெருந்துறை ஓம் சக்தி கோயில் முன்பு தமிழ்ச்செல்வனுடைய வாகனத்தை திருடியதையும் 15.10.2020ஆம் தேதி பவானி டவுனில் TN 36 AT 3811 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் இருசக்கர வாகனத்தையும் திருடியதையும் ஒப்புக் கொண்டவர்களை 16.10 .2020 ஆம் தேதி காலை. 06:15 மணிக்கு பெருந்துறை காவல் உதவி ஆய்வாளர் கைது செய்தும் எங்கள் முன்னிலையில் அப்துல் ரகுமான் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும் பின்னர் அவர்கள் திருட பயன்படுத்திய TN 39 CH 9473 Burgman என்ற வண்டியையும் பவானியில் திருடிய TN 36 AT 3811 என்ற பிளண்டர் வண்டியையும் போலீசில் ஒப்படைத்தார்கள் என்றும் அதை பெருந்துறை காவல் உதவி ஆய்வாளர் செய்ததை கைப்பற்றுதல் பகுதிகளில் கைப்பற்றினார் என்றும் பின்னர் அப்துல் ரகுமானுடன் எங்கள் இருவரையும் கூட்டிச் சென்று திருப்பூர், குமார் நகர், ஆண்டிக்காடு முருங்கம்பாளையம் பூந்தோட்டம், ராஜம்மாள் லேஅவுட் இடத்தில் உள்ள அப்துல் ரகுமானின் முதல் மனைவி குடியிருக்கும் வீட்டின் அருகில் மறைத்து வைத்திருந்த தமிழ்ச்செல்வனின் TN 56 E 4666 என்ற ஹீரோ ஸ்ப்ளெண்டர் பிளஸ் வாகனத்தை எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் நாங்கள் அப்துல் ரகுமான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் 17.03.21ஆம் தேதி, பவானி காவல் உதவி ஆய்வாளர் மேற்படி கைப்பற்றப்பட்ட TN 36 At 3811 என்ற எண்ணுள்ள இரு சக்கர வாகனம் திருடு போய்விட்டதாக கண்டுபிடித்து தர கேட்டு ராஜேந்திரன். த/பெ. மகேஷ். 35, மண் தொழிலாளர் முதல் வீதி. பவானி என்பவர் 15.10.2020 ஆம் தேதி கொடுத்த புகாரின் பேரில் பவானி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றும் போலீசார் விசாரணையின்போது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:53:10 +0530

சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:53:19 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness
for Prosecution

| CC.No. | 164/2022 | Crime No. | 1095/2020 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-5-கோபால்சாமி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | |

**1ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி குவிமுச பிரிவு 317 ன் படி மனு அளிக்கப்பட்டு, மனு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருந்துறையில் குடியிருந்து கொண்டு, மெடிக்கலில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு கைப்பற்றுதல் மகசர்களிலும் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் அனைத்தையும் நான் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பெருந்துறை காவல் நிலையத்திற்கு காலை நேரத்தில் சென்றிருந்தேன். போலீசார் கையெழுத்து கேட்டார்கள். போட்டுக் கொடுத்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2020ஆம் தேதி, காலை 07.30 மணிக்கு, தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்து விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 13.10.2020 ஆம் தேதி, காலை சுமார் 11:30 மணிக்கு ஓம் சக்தி கோவிலின் அருகில் ஹீரோ ஸ்ப்ளெண்டர் பிளஸ் TN 56 E 4666 என்ற வண்டியை நிறுத்தி பூட்டிவிட்டு மெடிக்கலுக்கு வந்துவிட்டு மதியம் 02:30 மணி சுமாருக்குசென்று

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:53:28 +0530

பார்த்தபோது தமிழ்செல்வன் என்பவரின் வண்டியை காணவில்லை என்றும் யாரோ திருடி சென்று விட்டார்கள் என்றும் இது சம்பந்தமாக தமிழ்செல்வன் பெருந்துறை காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்து இருந்தார் என்றும் இந்நிலையில் கடந்த 16.10.2020 ஆம் தேதி நானும் மெடிக்கல் மேனேஜர் ஜெயபிரகாசம் ஆகிய இருவரையும் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்க சொல்லி போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டு, ஊத்துக்குளி – விஜயமங்கலம் ரோட்டில் பகலாயூர் மாரியம்மன் கோயில் முன்பு பெருந்துறை போலீசாருக்கு உதவியாக வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த TN 36 AT 3811 ஹீரோ ஹோண்டா ஸ்பிளிலெண்டர் என்ற இருசக்கர வாகனத்திலும் TN 39 CH 9473 என்ற பதிவு எண் கொண்ட Burgman இருசக்கர வாகனத்திலும் வந்தவர்களை நிறுத்தி விசாரணை செய்தபோது அவர்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியை 1) அப்துல் ரகுமான், வயது 38, த/பெ. முனவர் ஜான், 33, பொன்னுசாமி காம்பவுண்ட் , துவாரகை நகர் 3 வது வீதி, திருப்பூர். தற்போது ராஜம்மாள் லே–அவுட், பூந்தோட்டம், முருங்கப்பாளையம், குமார் நகர், திருப்பூர். 2). Burgman வண்டியில் வந்தவர் பர்வீன், வயது 25, க/பெ.அப்துல் ரகுமான், ப்ரியா ஸ்கூல் பின்புறம், எம்.ஆர்.கே இல்லம், சாமுண்டிபுரம், திருப்பூர் என்றும் சொன்னார்கள் என்றும் மேலும் விசாரிக்க அவர்கள் கடந்த 13 .10 .2020 ஆம் தேதி பெருந்துறை ஓம் சக்தி கோயில் முன்பு தமிழ்ச்செல்வனுடைய வாகனத்தை திருடியதையும் 15 .10 .2020ஆம் தேதி பவானி டவுனில் TN 36 AT 3811 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் இருசக்கர வாகனத்தையும் திருடியதையும் ஒப்பு கொண்டவர்களை 16.10 .2020 ஆம் தேதி காலை. 06:15 மணிக்கு பெருந்துறை காவல் உதவி ஆய்வாளர் கைது செய்தும் எங்கள் முன்னிலையில் அப்துல் ரகுமான் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும் பின்னர் அவர்கள் திருட பயன்படுத்திய TN 39 CH 9473 Burgman என்ற வண்டியையும் பவானியில் திருடிய TN 36 AT 3811 என்ற பிளண்டர் வண்டியையும் போலீசில் ஒப்படைத்தார்கள் என்றும் அதை பெருந்துறை காவல் உதவி ஆய்வாளர் செய்ததை கைப்பற்றுதல் பகுதிகளில் கைப்பற்றினார் என்றும் பின்னர் அப்துல் ரகுமானுடன் எங்கள் இருவரையும் கூட்டிச் சென்று திருப்பூர், குமார் நகர், ஆண்டிக்காடு முருங்கம்பாளையம் பூந்தோட்டம், ராஜம்மாள் லேஅவுட் இடத்தில் உள்ள அப்துல் ரகுமானின் முதல் மனைவி குடியிருக்கும் வீட்டின் அருகில் மறைத்து வைத்திருந்த தமிழ்ச்செல்வனின் TN 56 E 4666 என்ற ஹீரோ ஸ்ப்ளெண்டர் பிளஸ் வாகனத்தை எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் நாங்கள் அப்துல் ரகுமான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் 17.03.21ஆம் தேதி, பவானி காவல் உதவி ஆய்வாளர் மேற்படி கைப்பற்றப்பட்ட TN 36 AT 3811 என்ற எண்ணுள்ள இரு சக்கர வாகனம் திருடு போய்விட்டதாக கண்டுபிடித்து தர கேட்டு ராஜேந்திரன், த/பெ. மகேஷ். 35, மண் தொழிலாளர் முதல் வீதி. பவானி என்பவர் 15.10.2020 ஆம் தேதி கொடுத்த புகாரின் பேரில் பவானி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:53:35 +0530

செய்திருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:53:42 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani